பதிவாளர் நாயகம் திணைக்களம்

(செலவினத் தலைப்பு 254)



செயல்திறன் அறிக்கை மற்றும் கணக்குகள் - 2021

« பொருளடக்கம் »

01. அத்தியாயம் – நிறுவனத் தோற்றம் / செயன்முறைக்குட்படுத்தலின் சாராம்சம்

1.1. அறிமுகம்
1.2. நிறுவனத்தின் நோக்கு மற்றும் செயற்பணி
1.3. பிரதான கடமைகள்
1.4. நிறுவனக் கட்டமைப்பு

02. அத்தியாயம் – முன்னேற்றம் மற்றும் தொலைநோக்கு

2.1. நிருவாகப் பிரிவு
2.2. சிவில் பதிவு செய்தல் பிரிவு
2.3. நொத்தாரிசுப் பிரிவு
2.4. இ-காணிப் பிரிவு
2.5. தகவல் தொழிநுட்பப் பிரிவு
2.6. உரித்துப் பிரிவு
2.7. புள்ளிவிபரப் பிரிவு

03. அத்தியாயம் – 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ந் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான மொத்த நிதிப் பெறுபேறு

3.1. நிதி பெறுபேற்றுக் கூற்று
3.2. நிதி நிலைமைப் பற்றியக் கூற்று
3.3. நிதிப் பாய்ச்சல் கூற்று
3.4. வருமானம் சேகரித்தல் பெறுபேறு
3.5. ஒதுக்கப்பட்ட ஒதுக்கத்தினைப் பயன்படுத்தலின் பெறுபேறு
3.6. நி.ஒ.208 இன் பிரகாரம், வேறு அமைச்சு/ திணைக்களங்களின் பிரதிநிதியாக இந்த திணைக்களத்திற்கு/ மாவட்ட செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு அளிக்கப்பட்ட அளிப்புக்கள்
3.7. கணக்காய்வதிபதியின் அறிக்கை

04. அத்தியாயம்- செயல்திறன் காட்டிகள்

4.1. திணைக்களத்தின் செயல்திறன் காட்டிகள்

05. அத்தியாயம்- நிலைத்து நிற்கும் அபிவிருத்தியின் நோக்கத்தினை (SDG) பூர்த்தி செய்துக்கொள்ளலின் செயல்திறன்.

5.1. அடையாளம் காணப்பட்ட உரிய நிலைத்து நிற்கும் அபிவிருத்தியின் நோக்கம்

06.அத்தியாயம் – மனிதவள முகாமைத்துவ தோற்றம்

6.1. ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம்

6.2. நிறுவனத்தின் செயல்திறனில் மனிதவள குறை அல்லது மிகை தாக்கம் செலுத்தும் விதம்

6.3. மனிதவள அபிவிருத்தி

07. அத்தியாயம் – இணக்கப்பாட்டு அறிக்கை

மாநில பாதுகாப்பு, உள்துறை மற்றும் பேரிடர் மேலாண்மை அமைச்சகம் அமைச்சு பணிவிடை

பொது மக்களின் சிவில் உரிமைகளினை பாதுகாத்து பதிவு செய்தலுக்காக சிறந்த சேவையினை நிறைவேற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களம் அசையா மற்றும் அசையும் ஆதனங்களுக்கு உரிய சட்டரீதியான ஆவணங்கள் மற்றும் உரித்தினை பதிவு செய்யும். அவ்வாறே விவாகம், பிறப்பு மற்றும் இறப்புக்களினைப் பதிவு செய்தல் மூலமும், அநத ஆவணங்களினைப் பாதுகாத்தல் மூலமும், அந்த ஆவணங்களில் இருந்து உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளினை வழங்கல் மூலமும் பதிவாளர் நாயகம் திணைக்களம் சேவையினை பொது மக்களுக்கு வழங்கும்.

பதிவாளர் நாயகம் திணைக்களம் நிறுவப்பட்டு 158 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் வலய அலுவலகங்கள், காணிப்பதிவகங்கள் மற்றும் பிரதேச அலுவலகங்களில் அமைந்துள்ள மாவட்டப் பதிவாளர் பிரிவுகள் மூலம் சிறந்த சேவையினை நிறைவேற்றுதல் தெளிவானதாகும். கணனி தொழிநுட்பத்தினைப் பயன்படுத்தி மிகவும் வினைத்திறனான மற்றும் உயர்ந்த குணாம்சத்துடன் சேவையினை வழங்குதல் அரச கொள்கையின் கீழ் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் மூலம் உற்பத்தித் திறனான திட்டங்கள் பல கடந்த வருடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

மக்கள் பரமாதிபத்தியத்தியத்தினை நிறைவேற்றும் விதம் ஜனநாயகத்தினை மையப்படுத்தி அரச சேவையின் மூலம், அரசாங்கத்தின் திட்டம் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் செயற்பாட்டிற்கு பங்களிப்பினை மேற்கொள்வதற்கு, பதிவாளர் நாயகம் திணைக்களத்தினை பொதுமக்களின் தேவைக்கிணங்க பொறுப்பு மற்றும் வெ ளிப்படைத்தன்மையுடனான பதிலினை அளித்தலாக அடையாளம் காணப்பட இயலும்.

உள்ளக நடவடிக்கைகள், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு பொது மக்களுக்கு மிகவும் நெருங்கிய விரிவான சேவையினை வழங்கும் நோக்கத்துடன் தற்பொழுது நடவடிக்கைகள் பலவற்றினை மேற்கொண்டுள்ளது. பொது மக்கள் அலுவலர்களின் பின்னால் செல்வதற்கு பதிலாக அலுவலர்கள் மக்களினை நெருங்கி சேவையினை வழங்குவதற்காக பதிவாளர் நாயகம் திணைக்களம் தீவிர பங்களிப்பினை வழங்கி பொது மக்களின் தேவைகளினை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகளினை மேற்கொண்டுள்ளது.

அரச சேவையின் கடமை மற்றும் பொறுப்புக்களினை நிறைவேற்றி என்னுடன் இணைந்து பொது மக்கள் மயமான கவரத்தகு 4 சேவையினை வழங்குவதற்கு அர்ப்பணிப்பு வழங்கும் செயலாளர் மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின்

சமல் ராஜபக்ஷ
மாநில பாதுகாப்பு, உள்துறை மற்றும் பேரிடர் மேலாண்மை அமைச்சர்

அனைத்து அலுவலக ஆளனியினருக்கும் நன்றிக்கூறுகின்றேன்.

மாநில பாதுகாப்பு, உள்துறை மற்றும் பேரிடர் மேலாண்மை அமைச்சகம் அமைச்சு செயலாளர்களின் பணிவிடை

பொது மக்களின் சிவில் உரிமைகள் மற்றும் அசையா மற்றும் அசையும் ஆதனங்களின் சட்டரீதியான உரித்தினை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் பதிவு, பாதுகாப்பு மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளினை வழங்கும் மக்கள் மையப்படுத்திய சேவையினை ஒழுங்குப்படுத்தும் முன்னோடியாக பதிவாளர் நாயகம் திணைக்களத்தினை அடையாளம் காண இயலும். "இலங்கையரின் பதிவு மற்றும் இணைந்த உரித்துக்களினைப் பாதுகாத்தல்" என்னும் இலக்கினை அடையும் பொருட்டு நிறுவப்பட்டுள்ள பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் கடமைப்பொறுப்புக்கள் பாரியதானதாகும்.

தீவின் அனைத்து பிரதேசங்களினையும் உள்ளடக்கும் விதம் மற்றும் அனைத்து நபர்களினதும் பிறப்பு தொடக்கம் இறப்பு வரையிலான அனைத்து சிவில் மற்றும் காணி உரிமைகளினை பதிவு செய்து மக்கள் வாழ்க்கையுடன் சமீபமாக கடமையாற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களம் மிகவும் விரைவான சேவையினை வழங்குவதற்காக தற்பொழுது மிகவும் சிறப்பான வழிமுறைகள் பலவற்றினை மேற்கொண்டுள்ளமை இந்த அறிக்கை மூலம் தெளிவாகின்றது.

சேவையினைப் பெறுபவர்களுக்காக எதிர்ப்பார்க்கும் சேவையினை வெற்றிகரமாக வழங்குவதற்கு பதிவாளர் நாயகம் உட்பட மொத்த அலுவலக ஆளனியினரிடமிருந்தும் கிடைக்கப்பெற்றுள்ள ஒத்துழைப்பினை மிகவும் பாராட்டுகின்றேன். பிர ஜைகளின் தேவையினை அறிந்து அந்த தேவையினை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்காக மேலும் முக்கியமான வேலைத்திட்டங்கள் மற்றும் யோசனைகளினை நடைமுறைப்படுத்துவதற்கு பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு இயலுமை கிடைக்கும் என நான் விசுவாசிக்கின்றேன்.

நவீன தொழிநுட்ப உபகரணங்களினைப் பயன்படுத்தி பொது மக்களுக்கு மிகவும் நெருங்கிய, வினைத்திறனான மற்றும் குணாம்சமான சேவையினை வழங்க எமது அமைச்சின் வழக்காட்டல் மற்றும் ஆலோசனைகளினை எப்பொழுதும் பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு வழங்குவதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம்.எச்.எம். சித்ரானந்தா

செயலாளர்

மாநில பாதுகாப்பு, உள்துறை மற்றும் பேரிடர் மேலாண்மை அமைச்சகம்

பதிவாளர் நாயகத்தின் பணிவிடை

பழைமை வாய்ந்த வரலாற்றுக்கு உரிமைக்கூறும் பதிவாளர் நாயகம் திணைக்களம் நிறுவப்பட்டுள்ளது 1864 ஜனவரி மாதத்தில் ஆகும். அவ்வாறே இந்த திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவையினை மிகவும் வினைத்திறனாக நிறைவேற்றுவதற்காக தேவையான வழிக்காட்டலின் ஊடாக முன்னோக்கி பயணிக்கின்றது. இந்த திணைக்களம் ஆரம்பித்த கட்டத்தில் முக்கியமான கடமையாகியது ஆவணம் பதிவு செய்தல் ஆயினும் பிற்காலத்தில் அதாவது 1867 ஆம் ஆண்டில் இலங்கை பொதுமக்களின் சிவில் உரிமையான விவாகம்,பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

பொது மக்களுக்கு மிகவும் வினைத்திறனான சேவையினை நிறைவேற்றுவதற்கு இந்த திணைக்களம் மூலம் 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஒருநாள் சேவை வேலைத்திட்டம் தற்பொழுது சிறந்த சேவையினை வழங்கி வெற்றிகரமாக நடைப்பெற்றுக் கொண்டிருக்கின்றது. இதற்கு மேலதிகமாக இ-இடம், இ-பிறப்பு, விவாகம் மற்றும் இறப்பு, இ-உரித்து மற்றும் இ-சனத்தொகை ஆகிய திட்டங்கள் மிகவும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதாக குறிப்பிடப்படல் வேண்டும். திணைக்களத்தின் மூலம் 2021 ஆம் ஆண்டில் நிகழ்நிலை முறையின் ஊடாக பிறப்புச் சான்றிதழ்களின் பிரதிகள் வழங்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனூடாக மிகவும் வினைத்திறனான மற்றும் உற்பத்தித் திறனான அரச சேவையினை உருவாக்குவதற்கு எமது திணைக்களத்திற்கு சந்தர்ப்பங்கள் எழுந்துள்ளது. இதற்கு மேலதிகமாக பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் கீழ் உள்ள பிரதேச அலுவலகங்கள் மூலம் வினைத்திறனான நட்புறவான சேவைகள் பல பொதுமக்களுக்கு உயர்ந்த குணாம்சத்துடன் வழங்குவதற்கு தேவையான சூழலினை உருவாக்குவதற்கு இயலுமை கிடைத்துள்ளமை எனக்கு மகிழ்ச்சியான விடயமாகும்.

விசேடமாக கொவிட் தொற்று போன்ற மிகவும் பாரதூரமான நிலைமையின் கீழாயினும் எமது திணைக்களத்திற்கு அளிக்கப்பட்டுள்ள கடமைப் பொறுப்புக்களினை சிறந்ததாக நிறைவேற்றுவதற்கு இயலுமானமை பற்றி எனது மொத்த அலுவலக ஆளனியருக்கு நான் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். பல்வேறு சிக்கல்களுடனான சந்தர்ப்பங்கள் இருந்தாலும் இந்நாட்டின் பிரதானமான திணைக்களமான பதிவாளர் நாயகம் திணைக்களம் மூலம் 2021 ஆம் வருடத்தினுள் நிகழ்த்தப்பட்டுள்ள சேவைப் பற்றி மிகவும் புரிந்துணர்வினை இந்த அறிக்கையினூடாக தெரிந்துக் கொள்ள இயலும்.

எமது இந்த அதிவிசாலமான கடமைப் பொறுப்புக்களினை உரிய விதம் நிறைவேற்றுவதற்கு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் வழிக்காட்டல் மற்றும் ஆலோசனையினை மிகவும் மதிக்கின்றேன். இறுதியாக மேலும் மிகவும் பாதுகாப்பான இலங்கையினை உருவாக்கும் நோக்கத்துடன் இந்த திணைக்களம் அனைத்து திறத்தவர்களினதும் தொடர்ச்சியான பங்களிப்பினை தொடர்ந்தும் வழங்குவதற்கு எதிர்ப்பார்க்கின்றேன்.

பி.எஸ்.பி.அபேவர்தன

பதிவாளர் ஜெனரல்

01. அத்தியாயம்- நிறுவனத்தின் தோற்றம்

1.1 அறிமுகம்

159 வருட பழைமை வாய்ந்த வரலாற்றுக்கு உரிமையுடைய பதிவாளர் நாயகம் திணைக்களம் இலங்கை பிரஜைகளின் சிவில் உரிமைகளினை பாதுகாத்து பதிவு செய்தல் நடவடிக்கையினை நிகழ்த்தும் அடிப்படை நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. அசையா மற்றும் அசையும் ஆதனங்களுக்குரிய சட்டரீதியான ஆவணங்கள் மற்றும் உரித்தின் பதிவு, விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு ஆகிய அடிப்படை இல்ல நிகழ்வுகளினை பதிவு செய்தல் மற்றும் அதற்குரிய பிரதிகள் ஆகியவற்றினை வழங்கல் கடமைகளினை நிறைவேற்றுகின்றது. 1992 ஆம் ஆண்டு தொடக்கம் பொது மக்கள் நலனோம்பு மற்றும் சிறந்த வினைத்திறனான சேவையினை வழங்கும் நோக்குடன் சிவில் பதிவு செய்தல் நடவடிக்கை பிரதேச செயலகப் பிரிவு வரை பரவாக்கியுள்ளது.

1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க காணி உரித்து பதிவு செய்தல் சட்டத்தின் கீழ் காணி உரித்து பதிவு செய்தல் கடமைப் பொறுப்பும் இந்த திணைக்களத்தின் மூலம் நிகழ்த்தப்படுகின்றது. தீவு முழுவதும் காணி மற்றும் மாவட்டப் பதிவகங்கள் 45 இன் மூலம் பொதுமக்கள் சேவை மேலும் விரிவுப்படுத்தியுள்ளது.

“சுபீட்சமான தொலை நோக்கு” இன் கீழ் திட்டமிடப்பட்டுள்ள புதிய அரசாங்கத்தின் தேசிய கொள்கைகளுக்கு இணங்க மிகவும் உற்பத்தித்திறனான சேவையினை நிறைவேற்றுவதற்காக தற்பொழுது புதிய தொழிநுட்பத்தினை பயன்படுத்தி பொதுமக்களுக்குத் தேவையான தகவல்களினை இலகுவாக பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

வலய அலுவலகம்

கடமைகள்

1. ஆவணங்கள் பதிவு செய்தல் கட்டளைச் சட்டத்தின் 35 வது பிரிவின் கீழ் மாகாணத்தினுள் இருக்கும் அனைத்து காணிப் பதிவகங்களிலும் ஆவணங்கள் பதிவு செய்தலில் நிகழ்ந்துள்ள தவறுகளுக்காக கட்டளைகளினைப் பெற்றுக் கொடுத்தல்.

2. அனைத்துக் காணிப்பதிவகங்களிலும் ஆவணங்கள் பதிவு செய்தல் கட்டளைச் சட்டத்தின் 36(1), (2) பிரிவுகளின் கீழ் நிகழ்த்தப்படும் ஆவணங்களினை தள்ளுபடி செய்வதற்குரிய சட்டத்தின் 38 வது பிரவின் கீழ் கிடைக்கும் மேன்முறையீடுகளுக்கான அனுமதியினை வழங்குதல்.
3. அற்றோணி தத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் தமது வலய அதிகார பிரதேசத்திற்கு உரித்தான அற்றோணி தத்துவத்தினை பதிவு செய்தல் மற்றும் அது சம்பந்தமான ஆவணங்களினைப் பேணுதல்.

4. நொத்தாரிசுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் மாகாணத்தின் அனைத்து நொத்தாரிசு கண்காணிப்பு மற்றும் அவர்களின் இரண்டாம் பிரதிகளினை காணிப் பதிவாகத்திற்கு வழங்குதலில் நிகழும் தாமதம் மற்றும் ஒழுக்காற்று பற்றி கீழ் குறிப்பிடப்படும் கடமைகளினை நிறைவேற்றுவதற்காக கட்டளையினை வழங்குதல்.

I. பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டுள்ள கட்டளையின் பிரகாரம் நொத்தாரிசினால் நிகழ்த்தப்பட்டுள்ள தவறுகளின் எண்ணிக் மைற்றும் எழுதி உறுதிப்படுத்தப்பட்டுள்ள உறுதிகளின் பெறுமதியினை கருத்திற் கொண்டு இரண்டாவது பிரதியினை வழங்கும் பொழுது நிகழ்ந்துள்ள தாமத காலத்திற்கு இணங்க இணக்கத் தொகையினை விதித்தல்.

II. நொத்தாரிசுகளினால் உரிய தினம் இரண்டாம் பிரதியினை வழங்காமை தொடர்பாக அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்காக காணிப் பதிவாளர்களுக்கு கட்டளையினை வழங்குதல்.

III. நொத்தாரிசுகளினால் நிகழ்த்தப்படும் தவறு பற்றி எச்சரிக்கை விடுத்தல்.

5. வலயத்தினுள் மகவேற்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் மகவேற்கப்பட்ட பிள்ளைகளின் பிறப்பினை மீள பதிவு செய்தல்.
6. உரித்துப் பதிவு செய்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் தலைமை அலுவலகத்தின் பரவலாக்கப்பட்ட அதிகாரத்தினை நடைமுறைப்படுத்தல்.
7. உரித்துச் சட்டத்திற்குரிய நடவடிக்கைகள் உரிய விதம் நிகழ்கின்றதா என கண்காணித்தல்
8. e- Land வேலைத்திட்டத்தின் கீழ் தலைமை அலுவலகத்தினால் பரவலாக்கப்பட்ட அதிகாரத்தினை நடைமுறைப்படுத்தல்.
9. வலயத்தினுள் காணிப் பதிவகங்களினை நிறுவுவதற்குரிய யோசனை மற்றும் சிபாரிசு சம்பந்தமான நடவடிக்கைகளினை மேற்கொள்ளுதல்.
10. மாகாணத்தின் அனைத்து பிரதேச அலுவலகங்கள், காணிப்பதிவகங்கள் மற்றும் மாவட்ட உதவி பதிவாளர் அலுவலகங்களில் திணைக்களப்படுத்தப்பட்ட அலுவலர்களின் பெறுபேற்று திறன் அறிக்கைகளில் இறுதி தீர்மானத்தினை வழங்குதல் மற்றும் பதிவாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல்.
11. மாகாணத்தின் அனைத்து மாவட்ட உதவி பதிவாளர் நாயகங்களின் மற்றும் காணிப் பதிவாளர்களின் விடுமுறையினை அனுமதித்தல்.
12. மாவட்ட உ.ப.நா.அலுவலகத்தின் நேரடி கண்காணிப்பு மற்றும் மாவட்ட காணிப் பதிவகம், பிரதேச செயலகங்களில் மாவட்ட பதிவாளர் பிரிவு, கிராமிய பதிவாளர் அலுவலகங்கள், நொத்தாரிசு அலுவலகங்களின் தேவைக்கிணங்க கண்காணிப்பு.
13. ஏனைய திணைக்களங்களின் மாகாண அலுவலகங்களுக்கு இடையில் தொடர்பினை பேணுதல்.
14. மாவட்ட உதவி பதிவாளர் நாயகம் அலுவலகத்திற்கு கிடைக்கப்பெறும் அறிக்கைகளினை கண்காணித்தல் மற்றும் தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல்
15. மாகாணங்களின் மத்திய பதிவேட்டறைகளின் நிருவாக நடவடிக்கை
16. பிறப்புக்கள் இறப்புக்கள் சட்டத்தின் 12(1) மற்றும் விவாகக் கட்டளைச் சட்டத்தின் 37(3) ஆம் பிரிவுகளின் கீழ் பிரதேச அலுவலகங்களில் மேலதிக மாவட்டப் பதிவாளர்களின் கோரிக்கையின் பேரில் பிரதிகளினை வழங்குதல்.

17. பிறப்புக்கள் மற்றும் இறப்புக்கள் சட்டத்தின் 27, 27(அ) மற்றும் 52(1), 53 ஆம் பிரிவுகளில் அனுமதிக்கப்பட்ட பிரதிக்கினையின் பேரில் அந்த சான்றிதழ்களின் இரண்டாம் பிரதிகளினை திருத்தஞ் செய்தல்.
18. காணாமற் போனவர்களின் இறப்புச் சான்றிதழ்களினை வழங்கும் கோரிக்கையினை அனுமதித்தல் மற்றும் காணப்படாமைக்கான சான்றிதழ்களினை வழங்குதலினை அனுமதித்தல்.
19. பதிவாளர் நாயகம் அவர்களின் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அளிக்கப்படும் வேறு கடமைகள்

மாவட்ட உதவி பதிவாளர் நாயகம் அலுவலகம்

கடமைகள்

1. பிறப்புக்கள் மற்றும் இறப்புக்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் உரிய பிரதேச அலுவலகங்களில் கிடைக்கப்பெறும் பிரதிக்கினையின் பேரில் நடவடிக்கையினை மேற்கொள்ளுதல் மற்றும் இறுதிக் கட்டளையினைப் பெற்றுக் கொடுத்தல்.

24 பிரிவு- காலங்கடந்த பிறப்பினை பதிவு செய்தல்

27 (அ) - பிறப்புச் சான்றிதழ்களில் தகப்பனின் தகவல்களினை திருத்தஞ் செய்தல்

36 - காலங்கடந்த இறப்பினை பதிவு செய்தல்

52 - பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களில் உண்மை மற்றும் பொழிப்பு சம்பந்தமாக திருத்தம் மற்றும் ஆவண தவறுகளினை திருத்தஞ் செய்தல்

53 - திடீர் இறப்பு சம்பந்தமான திருத்தங்கள்

2. அனுமான வயதுச் சான்றிதழ் வழங்குல் மற்றும் அவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளினை வழங்குதல்.

3. கண்டிய விவாக மற்றும் விவாகரத்துக் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் மற்றும் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துக் கட்டளைச் சட்டத்தின் 77 வது பிரிவின் கீழ் விவாகச் சான்றிதழில் திருத்தம் செய்வதற்கு உரியதாக மாவட்ட பதிவாளர்களுக்கு அனுமதியினை வழங்குதல்.

4. அற்றோணி தத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் தமது மாவட்ட அதிகாரப் பிரதேசத்திற்கு உரியதாக அற்றோணி தத்துவங்களினை பதிவு செய்தல் மற்றும் அது சம்பந்தமான ஆவணங்களினைப் பேணுதல்.

5.அற்றோணி தத்துவ பிரதிகளினை வழங்குதல் மற்றும் அது பதிவு செய்யப்பட் ட ஏட்டுப் பிரதியினை வழங்குதல்.

6. காணிப் பதிவகம் மற்றும் பிரதேச செயலகங்களில் மாவட்டப் பதிவாளர் பிரிவினை நேரடியாக கண்காணித்தல்.

7. மாவட்டத்தினுள் அனைத்து விவாக, பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர்களின் நேரடி கண்காணிப்பு.

8. மாவட்டத்தின் நொத்தாரிசு அலுவலகங்களினை பரிசீலனை செய்தல்.

9. மாவட்ட உரித்துப் பதிவகங்களின் நேரடி கண்காணிப்பு மற்றும் பிரதேச உரித்து சம்பந்தமான கூட்டங்களில் கலந்துக் கொள்ளுதல்.

10. காணிப் பதிவகம் மற்றும் பிரதேச செயலகங்களில் பதிவாளர் பிரிவு சம்பந்தமான முன்னேற்ற மீளாய்வினை நிகழ்த்துதல், அந்த அலுவலகங்களில் வருமானம் மற்றும் செலவு அறிக்கைகளினை வரவழைத்தல் மற்றும் தமது மாகாண அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல்.

11.E-LAND வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் தமது பிரதேசத்தின் அனைத்துக் காணிப்பதிவகங்களில் அது சம்பந்தமான நேரடி கண்காணிப்பு.

12. காணிப் பதிவகங்களில் கிராம உள்ளடக்கம் பற்றிய தீர்மானத்தினை மேற்கொள்ளல் மற்றும் கட்டளை வழங்கல்.

13. மாவட்டத்தினுள் ஒருங்கமைக்கப்படும் அனைத்து நடமாடும் சேவை நடவடிக்கைக்காக திணைக்களத்தின் பேரில் பங்கேற்றல் மற்றும் அதற்கு உரியதாக நடவடிக்கையினை நிறைவேற்றுதல்.

14. தேவைக்கு இணங்க திணைக்களத்தின் கடமை பற்றிய பொது மக்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு அறிவூட்டும் வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்.

15. விவாகம், பிறப்பு, இறப்பு பிரிவுகளினை மீளமைத்தல் பற்றிய விடயங்களினை அறிக்கையிடல்.

16. மாவட்டம் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்பு குழு, பல்வேறு நிறுவனங்கள் மூலம் நடாத்தப்படும் கூட்டங்களில் திணைக்களத்திற்காக பங்கேற்றல்.

17. பதிவாளர் நாயகத்தினால் சந்தர்ப்பதிற்கு ஏற்றவாறு அளிக்கப்படும் வேறு கடமைகள்

காணிப் பதிவகம்

கடமைகள்

1. அசையா மற்றும் அறையும் ஆதனங்களுக்கு உரிய சட்டரீதியான ஆவணங்களினைப் பதிவு செய்தல்.

2.நொத்தாரிசுகளினால் எழுதப்படும் உறுதிகளில் அதாவது காணிப்புத்தக ஏடுகளின் மூலப் பிரதியின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியினை வழங்குதல்.

3. அதன் இரண்டாவது பிரதியினை பொறுப்பேற்று பாதுகாத்தல்.

4. இரண்டாவது பிரதியினை உறுதிப்படுத்தப்பட்ட பிரதியினை வழங்குதல்.

5. உரித்துப் பதிவு செய்தல்


6. மேற்படி காணிப்புத்தக ஏடு மற்றும் இரண்டாவது பிரதிகளுக்கு உரிய அதிகாரப் பிரதேசத்தில் தொடுக்கப்படும் நீதிமன்ற வழக்குகளுக்காக சாட்சிகள் வழங்கல்.

7. முத்திரைக் கட்டணத்தினை சேகரித்தல் மற்றும் வரவு வைத்தல் (மாகாண சபைக்கு மற்றும் மத்திய அரசிற்கு)

8. பாதுகாப்பு நடவடிக்கை மற்றும் காணி சுருக்கப் பிரதிகளினை வழங்குதல்.

9. நொத்தாரிசுகளினை நிருவாகம் செய்தல் நடவடிக்கையினை மேற்கொள்ளுதல்.

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் நிறுவன கட்டமைப்பு



1.2. நிறுவனத்தின் நோக்கு மற்றும் செயற்பணி

இலக்கு

பொது மக்களின் சிவில் உரிமைகள், அசையும் மற்றும் அசையா ஆதனங்களின் சட்டரீதியான உரித்தினை உறுதிப்படுத்தும் கடித ஆவணங்களின் பதிவினைப் பாதுகாத்தல் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளினை வழங்கும் மக்களின் மத்திய மையப்படுத்தப்பட்ட சேவை வழங்கலின் முன்னோக்கிய பயணியாக நடவடிக்கையினை மேற்கொள்ளுதல்.

செயற்பணி

எமது செயற்பணியாவது அசையும் மற்றும் அசையா ஆதனங்களுக்கு உரிய சட்ட ரீதியான ஆவணங்களினைப் பதிவு செய்தல் மற்றும் இலங்கையில் காணி உரித்தினை பதிவு செய்தல் மற்றும் மக்களின் முக்கியமான சந்தர்ப்பங்களான விவாகம், பிறப்பு மற்றும் இறப்பினை பதிவு செய்தல், அந்த ஆவணங்களினைப் பாதுகாத்தல் மற்றும் கோரிக்கையின் பேரில் அவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளினை வழங்குதல் மற்றும் அவற்றின் மூலம் பொது மக்களுக்கு தமது உரிமைகளினை பாதுகாத்தலுக்கு உதவியளித்தல்

1.3 திணைக்களத்தின் கடமைகள் மற்றும் நடைமுறைகள்

பிரதான கடமைகள் மூன்று.

1. பதிவு செய்தல்.
2. பொறுப்புத்தன்மை மற்றும் ஆவண பாதுகாப்பு.
3. உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளினை வழங்கல்.

செயற்பாடுகள்

1.1 பதிவு செய்தல்

- ஆவணங்களினை பதிவு செய்தல்
- அசையா சொத்துக்கள் மற்றும் ஆதனங்களுக்கு உரிய ஆவணங்க்ளினை பதிவு செய்தல்
- அசையும் ஆதனங்களுக்கு உரிய ஆவணங்களினை பதிவு செய்தல்
- அற்றோனி தத்துவத்தினை பதிவு செய்தல்

1.2 உரித்துப் பதிவு செய்தல்

- அசையா சொத்துக்களுக்கு உரிய உரித்தினை பதிவு செய்தல்

1.3 சிவில் பதிவு

- இலங்கையினுள் நிகழும் அனைத்து விவாகம், பிறப்பு மற்றும் இறப்புக்களினையும், வெளிநாட்டில் இடம்பெறும் இலங்கையரின் விவாகம், பிறப்பு மற்றும் இறப்புக்களினைப் பதிவு செய்தல்.
- பிள்ளையினை மகவேற்பு செய்யும் நீதிமன்ற கட்டளையினை பதிவு செய்தல் மற்றும் அப்பிள்ளைகளின் பிறப்பினை மீள பதிவு செய்தல்.
- கண்டிய விவாகம், மற்றும் விவாகரத்து கோரிக்கையின் பேரில் தீர்மானம் மேற்கொள்ளல்.
- கண்டிய விவாகம் மற்றும் விவாகரத்தினை பதிவு செய்தல்..

2 பொறுப்பு மற்றும் ஆவண பாதுகாப்பு.

மேற்படி ஆவணங்கள், நொத்தாரிசு உறுதிகளின் இரண்டாம் பிரதி மற்றும் பாதுகாக்கப்படக்கூடிய ஏனைய ஆவணங்கள் மற்றும் ஆவணங்களின் பொறுப்பு மற்றும் பாதுகாப்பு

3 உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளினை வழங்கல்.

உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளினை வழங்குவதற்கு உரிய அனைத்து ஆவணங்களினதும் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளினை அவ்வாறு பெற்றுக் கொள்வதற்கு அதிகாரம் பெற்ற நபர்களுக்கு வழங்குதல்.

இணைச் செயற்பாடுகள்

- விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்களினை நியமித்தல் மற்றும் நிருவாகம் .
- நொத்தாரிவு நியமனம் மற்றும் நிருவாகம்.
- உறுதியின் மேல் மற்றும் வேறு ஆவணங்களின் மேல் உரிய முத்திரைக் கட்டணம் செலுத்தப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தல்.
- உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளின் மொழிப்பெயர்ப்பினை வழங்கல்.
- திருத்தங்களினை மேற்கொள்ளல்.
- வாழ்வியல் புள்ளிவிபரவியல் அறிக்கைகளினை பிரதிக்கினைக்குட்படுத்தல்.
- விடுமுறைக் கட்டளைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்.

சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்


1. காணி பதிவு செய்தல்

- 1927 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஆவணங்கள் பதிவு செய்தல் கட்டளைச் சட்டம் (117 வது அத்தியாயம்)
- 1907 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம் (107 வது அத்தியாயம்)
- 1917 ஆம் ஆண்டின் 09 வது நம்பிக்கைப் பொறுப்பு கட்டளைச் சட்டம்
- 2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க காணி (உடமை அளித்தலினை கட்டுப்படுத்தல்) சட்டம்
- 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஒழுங்குவிதிகள்) சட்டம்
- 2005 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தண்டப்பணம் அதிகரித்தல் சட்டம்
- 2017 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க இரத்துச் செய்யப்பட இயலாத நன்கொடை உறுதியினை பாரதூரமான செய்நன்றியினை அடிப்படையாகக் கொண்டு இரத்துச் செய்தல் சட்டம்
- 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இணைமாடி உரிமைச் சட்டம்
- 1902 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க அற்றோணி தத்துவத்தினை பதிவு செய்தல் கட்டளைச் சட்டம் (122 ஆம் அத்தியாயம்)
- 1969 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் (464 வது அத்தியாயம்)
- 1866 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உடமை மற்றும் பழைய உறுதிகள் கட்டளைச் சட்டம் (136 வது அத்தியாயம்)
- பழைய உறுதிகள் மற்றும் ஆவணங்களினை பதிவு செய்தல் கட்டளைச் சட்டம் (137 வது அத்தியாயம்)
- காணி ஆவணங்கள் (காணிப் புத்தக ஏட்டினை மீள தயாரித்தல்) கட்டளைச் சட்டம் (126 வது அத்தியாயம்)

2. விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல்

- 1951 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் சட்டம்
- 1952 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க கண்டிய விவாகம் மற்றும் விவாகரத்துச் சட்டம்
- 1951 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க முஸ்லிம் விவாகம் மற்றும் விவாகரத்துச் சட்டம்
- 1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பொது விவாகம் பதிவு செய்தல் சட்டம்
- 1941 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க மக வேற்புக் கட்டளைச் சட்டம்
- 1981 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க கொன்சியூலர் சட்டம்
- 2010 ஆம் ஆண்டின் 19 ஆம் ஆண்டின் இறப்பு பதிவு செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்
- 2016 ஆம் ஆண்டின் 16 ஆம் ஆண்டின் இறப்பு பதிவு செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்

1.4 நிறுவனக் கட்டமைப்பு



02 அத்தியாயம் – முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

❖ நிருவாகப் பிரிவு

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் நிருவாகப் பிரிவினால் திணைக்களத்தின் நிருவாகம் மற்றும் அலுவலக ஆளனியினரின் தாபன நடவடிக்கைகள் இடம்பெறுவதுடன் திணைக்களத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் தலைமை அலுவலகம், அனைத்து வலய அலுவலகங்கள் மற்றும் காணிப் பதிவகங்களின் நிருவாகம் மற்றும் தாபன நடவடிக்கைகளினை ஒழுங்குப்படுத்தல் மற்றும் கண்காணிப்பும் நிருவாகப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றது.

கடமைகள்

1. திணைக்களத்தின் இலக்கு மற்றும் செயற்பணியினை நிறைவேற்றுவதன் பொருட்டு அனைத்துப் பிரிவுகளினையும் இலக்குப்படுத்தல் மற்றும் அதற்காக பிரிவுகளுக்கு இடையில் சிறந்த தொடர்பினை பேணுதல்.

2. அனைத்து அலுவலர்களினதும் நியமனம், இடமாற்றம், பதவியுயர்வு, வினைத்திறன் தடைகாண் பரீட்சையினை நடாத்துதல், இளைப்பாற்றல், விடுமுறை மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை ஆகியவற்றின் கண்காணிப்பு.

3. அலுவலக ஆளனியினரின் ஒழுக்காற்று நிருவாக நடவடிக்கைகள், அடிப்படை விசாரணை/ ஒழுங்குமுறையான ஒழுக்காற்று விசாரணை/ ஒழுக்காற்று கட்டளைகளினை வழங்குதல் உட்பட அனைத்து நடவடிக்கைகளினதும் கண்காணிப்பு.

4. திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்ட அனைத்து அலுவலர்களினதும் தேசிய மற்றும் வெளிநாட்டு பயிற்சி நடவடிக்கைகளின் ஒழுங்கமைப்பு மற்றும் கண்காணிப்பு.

5. திணைக்களத்தின் போக்குவரத்து நடவடிக்கைகளின் நிருவாகம் மற்றும் கண்காணிப்பு.

6. திணைக்களத்தின் தபாலினை கொண்டு வருதல், கொண்டு செல்லுதல் மற்றும் பகிர்ந்தளித்தல் சம்பந்தமான அனைத்து நடவடிக்கைகளினையும் நிறைவேற்றுதல்.

7. திணைக்களத்தின் வருடாந்த செயற்பாட்டு திட்டங்களினை வகுத்தல், முன்னேற்ற மீளாய்வு, பின்னடைவு ஏற்படுமிடத்து தேவையான நடவடிக்கைகளினை மேற்கொள்வதற்கு உரிய பிரிவிற்கு சமர்ப்பித்தல் மற்றும் காலத்திற்கு ஏற்வாறான செயற்பாட்டுத் திட்டத்தின் திருத்தம்.

8. திணைக்களத்தின் பெறுபேற்று அறிக்கையினை தயாரித்தல் மற்றும் அதன் மீளாய்வினை தொடர் வருடத்தின் நடைமுறைத் திட்டத்தினை தயாரிப்பதற்காக பயன்படுத்தல்.

9. ஊழியர்களின் எண்ணிக்கையின் முகாமைத்துவம், வெற்றிடத்தினை நிரப்புதல் மற்றும் பகிர்ந்தளித்தல் சம்பந்தமான நடவடிக்கைகள்.

10. திணைக்களத்தின் நீர், மின்சாரம் மற்றும் தொடர்பாடல் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள், பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் ஆகிய ஒப்பந்த சேவை நடவடிக்கைகளின் நிருவாகம்.

11. திணைக்களப்படுத்தப்பட்ட சேவைகளின் சேவை சட்டவாக்கத்தினை தயாரித்தல் மற்றும் ஆட்சேர்ப்பு முறைகளினை திருத்துதல்.

12. திணைக்களத்தின் அனைத்து கட்டிடங்கள் மற்றும் பதவி இல்லங்களினை பேணுவதற்கான நடவடிக்கைகள்.

13. நி.ஒ.71 இன் கீழ் புதிய பதவிகளினை உருவாக்குதல்.

14. பதவிநிலை அலுவலர் கூட்டத்தினை கூட்டுதல், அறிக்கையினை தயாரித்தல் மற்றும் கண்காணிப்பு.

15. அரச காப்புறுதி உரித்திற்காக அலுவலர்களினைப் பதிவு செய்தல், பிரதிபலனுக்காக விண்ணப்பித்தல்.

16. பட்டதாரி பயிலுநர்களினை நியமித்தல், நிரந்தரப்படுத்தல் சம்பந்தமான நடவடிக்கைகளின் ஒருங்கமைப்பு.

17. அலுவலகத்திற்கு வெளியிலான விவாகத்திற்கான அனுமதியினைப் பெற்றுக் கொடுத்தல்.

18. மாவட்ட பதிவாளர்கள்/ மேலதிக மாவட்டப் பதிவாளர்களின் அதிகாரம் அளித்தல்.

19. தகவல்களினை தெரிந்துக்கொள்ளும் சட்டம் சம்பந்தமான நடவடிக்கைகள்.

20. தேர்தல்கள் ஆணைக்குழுவின் மூலம் நடாத்தப்படும் தேர்தல்களில் திணைக்கள நடவடிக்கைகளின் ஒருங்கமைப்பு மற்றும் கண்காணிப்பு.

21. வலய பொறுப்பு உதவி பதிவாளர் நாயகங்களின் முன்னோக்கிய மற்றும் செய்யப்பட்ட வேலைத்திட்டத்தினை அனுமதிக்காக சமர்ப்பித்தல்.

22. மேலதிக மற்றும் விடுமுறைத் தின சம்பளத்திற்கான அனுமதியினை வழங்குதல்.

23. சுதந்திர தபாலிற்கான ஒதுக்கத்தினை ஒதுக்குதல்.

24. புகையிரத தவணை பிரவேச பத்திரம் சம்பந்தமான நடவடிக்கை / புகையிர அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல் சம்பந்தமான நடவடிக்கை

2021 ஆம் வருடத்தின் செயற்திறன்

தொடர் இலக்கம்	கடமைப் பொறுப்புக்கள்	2021 ஆம் ஆண்டின் செயற்திறன்
01	போக்குவரத்துப் பிரிவின் மேற்பார்வை	தேவைக்கு இணங்க வாகனங்களினை ஒதுக்கல், வாகனங்களின் பேணல் மற்றும் சேவை நடவடிக்கைகளின் மேற்பார்வை.
02	திணைக்களத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் இடையில் சிறந்த கூட்டிணைப்பின் மூலம் ஒழுங்குமுறையான, வினைத்திறனான உற்பத்தித்திறனான கட்டுப்பாட்டு மாதிரியினை ஏற்படுத்தல்.	2022 ஆம் வருடத்திற்குரிய செயற்பாட்டுத் திட்டத்தினை தயாரித்தலுக்காக பதவிநிலை அலுவலரின் தெரிந்துக் கொள்ளலுடன் தேவையான நடவடிக்கையினை மேற்கொள்ளல்
03	தலைமை அலுவலகத்தின் மற்றும் காணிப் பதிவகங்களின் உற்பத்தித்திறன் அபிவிருத்தி நடவடிக்கை மேற்பார்வை	1. வலய பொறுப்பு உதவி பதிவாளர் நாயகங்களின் மாதாந்த வேலைத்திட்டம் மற்றும் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களின் மேற்பார்வை.
		2. வலய பொறுப்பு உதவி பதிவாளர் நாயகங்களினால் அலுவலக பரிசீலனையினை மேற்கொள்ளல்
04	2022 ஆம் வருடத்தில் புதிய காணிப்பதிவகங்கள் 7 இனை நிறுவப்படுவதற்கு உத்தேசித்துள்ளதுடன் அதற்குரியதான திட்டம் மற்றும்	காணிப்பதிவகங்கள் 3 இனை 2021 ஆம் ஆண்டில் திறந்து வைத்தல்.

	செலவு மதிப்பீட்டினை 2021 ஆம் வருடத்தினுள் தயாரித்தல்	
05	2022 ஆம் வருடத்தில் புதிய உதவி பதிவாளர் நாயகம் அலுவலகங்கள் 25 இனை நிறுவப்படுவதற்கு உத்தேசித்துள்ளதுடன் அதற்குரியதான திட்டம் மற்றும் செலவு மதிப்பீட்டினை 2021 ஆம் வருடத்தினுள் தயாரித்தல்	புதிய மாவட்ட உதவி பதிவாளர் நாயகம் அலுவலகங்கள் 18 2021 ஆம் ஆண்டில் திறந்து வைத்தல்

கொள்திறன் அபிவிருத்தி
2021 ஆம் வருடத்தின் முன்னேற்றம்

திகதி	செலவிடப்பட்ட ஒதுக்கம் (ரூ.)	பங்கேற்ற அலுவலர்களின் எண்ணிக்கை	பயிற்சி வேலை த்திட்ம்
2021.07.20	ரூ:15000/-	36	அநுராதபுரம், பதுளை, ஹம்பாந்தோட்டை காணிப் பதிவகங்களில் பொதுமக்களின் சிக்கல்களுக்கான தீர்வு மற்றும் மனோபாவத்தினை வளர்த்தல்
2021.07.22	ரூ:15000/-	36	காலி, மாத்தளை, கம்பளை காணிப்பதிவகங்களில் பொதுமக்களின் சிக்கல்களுக்கான தீர்வு மற்றும் மனோபாவத்தினை வளர்த்தல்
2021.08.01	ரூ:15000/-	36	பருத்தித்துறை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் காணிப்பதிவகங்களில் பொதுமக்களின் சிக்கல்களுக்கான தீர்வு மற்றும் மனோபாவத்தினை வளர்த்தல்
2021.08.02	ரூ:15000/-	36	வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் காணிப்பதிவகங்களில் பொதுமக்களின் சிக்கல்களுக்கான தீர்வு மற்றும் மனோபாவத்தினை வளர்த்தல்
2021.08.03	ரூ:15000/-	36	மொணராகலை, கேகாலை, மாத்தறை காணிப்பதிவகங்களில் பொதுமக்களின் சிக்கல்களுக்கான தீர்வு மற்றும் மனோபாவத்தினை வளர்த்தல்
2021..08.05	ரூ:15000/-	36	கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை காணிப்பதிவகங்களில் பொதுமக்களின் சிக்கல்களுக்கான தீர்வு மற்றும் மனோபாவத்தினை வளர்த்தல்
2021.08.07	ரூ:20000/-	200	அனைத்துக் காணிப்பதிவாளர்கள் , மேலதிக மாவட்டப் பதிவாளர்கள், மேலதிக உரித்துப் பதிவாளர்களுக்கான நிகழ்நிலை பயிற்சி
2021.08.10	ரூ:15000/-	36	இரத்தினபுரி, பாணந்துறை, பலப்பிட்டிய காணிப்பதிவகங்களில் பொதுமக்களின் சிக்கல்களுக்கான தீர்வு மற்றும் மனோபாவத்தினை வளர்த்தல்

2021.08.12	ரூ:15000/-	36	புத்தளம், குருநாகலை,பொலந்நறுவை காணிப்பதிவகங்களில் பொதுமக்களின் சிக்கல்களுக்கான தீர்வு மற்றும் மனோபாவத்தினை வளர்த்தல்
2021.08.17	ரூ:15000/-	36	எல்பிட்டிய, எம்பிலிப்பிட்டிய, மாரவில காணிப்பதிவகங்களில் பொதுமக்களின் சிக்கல்களுக்கான தீர்வு மற்றும் மனோபாவத்தினை வளர்த்தல்
2021.08.20	ரூ:15000/-	36	சிலாபம், அம்பாறை, நுவரெலிய, கொட்டபொல, அத்தனகல்ல காணிப்பதிவகங்களில் பொதுமக்களின் சிக்கல்களுக்கான தீர்வு மற்றும் மனோபாவத்தினை வளர்த்தல்
2021.08.24	ரூ:15000/-	36	கம்பஹா, நீர்க்கொழும்பு, குளியாப்பிட்டிய காணிப்பதிவகங்களில் பொதுமக்களின் சிக்கல்களுக்கான தீர்வு மற்றும் மனோபாவத்தினை வளர்த்தல்
2021.08.26	ரூ:15000/-	36	நிகவெரட்டிய, தங்காலை, மத்துகம காணிப்பதிவகங்களில் பொதுமக்களின் சிக்கல்களுக்கான தீர்வு மற்றும் மனோபாவத்தினை வளர்த்தல்

எதிர்கால நோக்கு

01. தொற்று நிலைமை காரணமாக முன்னைய வருடத்தில் செயற்படுத்த இயலாது போன நபர்களின் கடித கோவைகள், தபால் மற்றும் விடுமுறைக்காக வலையமைக்கப்பட்ட் கணனி முறைமையினை நிறுவுதல்.

02. தனிநபர் கடித ஆவணங்களில் நிலவும் குறைப்பாடுகளினை பூரணப்படுத்தல் மற்றும் அடிக்கடி பரீட்சிப்பதற்கான ஒழுங்கு முறைகளினை தயாரித்தல்.

03. ஆட்சேர்ப்பு முறைமையினை திருத்தியதன் பின்னர் ஏற்படும் வெற்றிடங்கள் அம்முறைமைக்கு ஏற்றதான ஆட்சேர்த்தல்.

04. வலய பொறுப்பு உதவி பதிவாளர்கள் மற்றும் காணிப்பதிவாளர்களின் மாதாந்த கூட்டத்தினை கூட்டுதல்.

05. தலைமை அலுவலகத்தின் முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தினை நடாத்துதல்.

06. ஊழியர்களின் எண்ணத்தினை உயர்த்துவதற்கான ஊக்குவிப்பு கொடுப்பனவினை வழங்குதல்.

07. ஒழுங்கு முறையான தனிநபர் பெறுபேற்று திறன் மற்றும் மதிப்பீடு

08. அலுவலக ஆளனியினரினைப் பயிற்றுவித்தல்.

09. செயற்பாட்டுத் திட்டம்

9.1) செயற்பாட்டுத் திட்டத்தினை தயாரித்தல்.

9.2) செயற்பாட்டுத் திட்டத்திற்கு இணங்கியதாக முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தினை நடாத்துதல்.

9.3) செயற்பாட்டுத் திட்டத்தின் திருத்தத்திற்கு இணங்க மேம்படுத்தல்.
9.4) செயற்பாட்டு திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகளின் முன்னேற்றத்தில் பின்னடைவு ஏற்படுமிடத்து தேவையான நடைமுறைகளினை மேற்கொண்டு கண்காணிப்பு செய்தல்.

10. பெறுபேற்று அறிக்கையினை தயாரித்தல் மற்றும் மீளாய்வு.

கொள்திறன் அபிவிருத்தி- எதிர்கால நோக்கு

திகதி	செலவிடப்பட்ட ஒதுக்கம் (ரூ.)	பயிற்சி வேலை த்திட்டம்
2022 ஜன.- அக்டோ	300,000.00	நிறைவேற்று அலுவலர்களுக்கான உபாய வழி முகாமைத்துவம் மற்றும் கொள்கை வகுத்தல் பற்றிய பயிற்சி
2022 ஜன-டிசம்	100,000.00	புத்தகங் கட்டுநர்களுக்காக உபகரண தொழிநுட்பத்தினை பயன்படுத்துவதினை ஊக்குவித்தல்
2022 ஜன-டிசம்	300,000.00	அலுவலக உதவியாளர், பல்கரும, சாரதிகளுக்கான ஒழுக்காற்று பற்றிய பயிற்சி வேலைத்திட்டம்
2022 ஜன-டிசம்	500,000.00	நிறைவேற்று அலுவலர்களுக்கான பின்படிப்புக்கான அனுசரணை
2022 ஜன-டிசம்	300,000.00	காணிப் பதிவாளர்களின் சட்ட அறிவினை முன்னேற்றுதல்
2022 ஜன-டிசம்	500,000.00	முகாமைத்துவ சேவை அலுவலர்கள் மற்றும் ஆவண உதவியாளர்களுக்காக ஆவணங்களினை பதிவு செயதல் மற்றும் சிவில் பதிவு பற்றிய வேலைத்திட்டம்

❖ சிவில் பதிவு செய்தல் பிரிவு

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் சிவில் பதிவு செய்தல் பிரிவினால் நாட்டினுள் சிவில் பதிவு செய்தல் சம்பந்தமான அனைத்து நடவடிக்கைகளும் நிகழ்த்தப்படுகின்றது. இந்த திணைக்களத்தின் விடய தலைப்பின் கீழ் சிவில் பதிவிற்குரிய கடமைகளினை மேற்கொள்ளும் பிரதேச செயலகங்களின் நிருவாக நடவடிக்கைளுடன் தொடர்புடைய சிக்கல்களினை ஒருங்கமைத்தல் இந்த பிரிவின் மூலம் நிகழ்த்தப்படும்.

கடமைகள்

1. விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்களின் தனிநபர் கோவை சம்பந்தமான கடமை நடவடிக்கைகள்.

2. விவாகம், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களின் திருத்தத்திற்குரிய நீதிமன்ற அவதானிப்பு அறிக்கைகளினை அனுப்புதல்
நீதிமன்ற கட்டளைகளுக்கு இணங்க சான்றிதழ்களில் திருத்தத்தினை நிகழ்த்துவதற்கு பிரதேச செயலகங்களுக்கு கட்டளைகளினை அனுப்புதல்.

3. இந்த பிரிவிற்கு உரிய கட்ளை, சட்டங்களின் ஒதுக்கீடுகளுக்கு இணங்க பதிவாளர் நாயகத்தினை எதிர்வாதியாக்கி நீதிமன்றத்தின் கோவையிடப்படும் வழக்குகளுக்காக உதவி பதிவாளர் நாயகம் அவர்களின் ஆலோசனையின் பிரகாரம் பதிவாளர் நாயகத்திற்கு பதிலாக அவதானிப்பு மற்றும் சிபாரிசினை அனுப்புதல்,
தேவையான சந்தர்ப்பத்தில் நீதிமன்றத்தில் தோன்றுதல்,
தேவையான சந்தர்ப்பங்களில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் உதவியினைப் பெற்றுக் கொள்ளுதல்,

சட்டமா அதிபர் திணைக்களத்துடன் சட்ட கலந்துரையாடல்களில் பங்கேற்றல்.

4. பொது விவாக விவாகரத்து கட்டளைக்கிணங்க, அந்த விவாகச் சான்றிதழ்களில் விவாகரத்துச் செய்தல் பற்றிய குறிப்பினை பிரதேச செயலகத்திற்கு வழங்குதல்.

5. விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பிரிவுகளின் மீளமைப்பிற்குரிய சிபாரிசினைப் பெற்றுக் கொண்டு, கௌரவ அமைச்சரின் அனுமதியினைப் பெற்றுக் கொண்டு, வர்த்தமானியில் பிரசுரித்தல்.

6. இராணுவ நடவடிக்கைகளில் இறந்த படையினரின் மரணத்தினை பதிவு செய்தல்,
திருத்தஞ் செய்தல்,
உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளினை வழங்கல்.

7. விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு சம்பந்தமான விடயங்களுக்குரிய சுற்றுநிருபங்களினை தயாரித்தல்.

8. சிதைவடைந்த விவாகம், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களின் மீளமைப்பு விண்ணப்பங்களினைப் பெற்றுக் கொண்டு, பிரதேச செயலகங்களுக்கு சமர்ப்பித்து வழக்கினை கோவையிட்டு, வழக்கு கட்டளைப் பெறப்பட்டதன் பின்னர், அந்த ஆவண்களினை மீளமைத்தல்.

9. விவாகங்களினை பதிவு செய்வதற்காக கிறிஸ்தவ தேவாலயங்களினைப் பதிவு செய்தல்.

10. விவாகம், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளினை வழங்கல்.
11. விவாகம், பிறப்பு மற்றும் இறப்பசு சான்றிதழ்களினை சிங்கள, ஆங்கில மற்றும் தமிழ் மொழிப் பெயர்ப்புகளுக்கு மொழிப்பெயர்த்தல்.
12. தலைமை அலுவலத்திற்கு சமர்ப்பிக்கப்படும் பொதுமக்கள் சிக்கல்கள் சம்பந்தமாக ஆலோசனை வழங்கல்.

2021 ஆம் வருடத்தின் செயற்திறன்

பதிவாளர்கள்

2021.12.31 ந் திகயில் அறிக்கையிடப்பட்டதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டினுள் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் கடமையாற்றிய பதிவாளர்கள் சம்பந்மான அறிக்கை கீழே குறிப்பிடப்பட்டவாறாகும்.

MBB


2021 வருடத்திற்குரிய பதிவாளர்கள் பற்றிய விபரங்கள்	எண்ணிக்கை 2020	எண்ணிக்கை 2021
விவாகம் மற்றும் பிறப்பு, இறப்பு பதிவாளர்கள் (சிங்கள மொழி)	708	702
முஸ்லிம் விவாகப் பதிவாளர்கள் (சிங்கள மொழி	284	272
விவாகப் பதிவாளர்கள் (சிங்கள மொழி)	403	389
பிறப்பு மற்றும் இறப்பு வைத்திய பதிவாளர்கள் (சிங்கள மொழி)	48	49
பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்கள் (சிங்கள மொழி	50	48
விவாகம் மற்றும் பிறப்பு, இறப்பு பதிவாளர்கள் (தமிழ் மொழி)	164	154

முஸ்லிம் விவாகப் பதிவாளர்கள் (தமிழ் மொழி)	90	96
விவாகப் பதிவாளர்கள் (தமிழ் மொழி)	36	31
பிறப்பு மற்றும் இறப்பு வைத்திய பதிவாளர்கள் (தமிழ் மொழி)	11	10
பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்கள் (தமிழ் மொழி)	35	35
இளைப்பாறிய பதிவாளர்கள்		
கேட்டு விலகிய பதிவாளர்கள்		
இறப்பெய்திய பதிவாளர்கள்		
சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்ட பதிவாளர்கள்		
வருட இறுதியில் கடமையில் இருந்த பதிவாளர்கள்	1829	1786

. 2020.12.31 ந் திகதியில் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் கீழ் பதிவாளர்கள் 1829பேர்கள் கடமையாற்றியதுடன் 2021.12.31 ந் திகதியில் திணைக்களத்தின் கீழ் கடமையாற்றிய மொத்தப் பதிவாளர்களின் எண்ணிக்கை 1,786 வரை குறைவடைந்திருந்தது.

2021 வருடத்தில் திணைக்களத்தின் கீழ் கடமையாற்றி பதிவாளர்களின் எண்ணிக்கை

திணைக்களத்தின் கீழ் 2021.12.31 ந் திகதி கடமையாற்றிய 1,786 ஆன மொத்த பதிவாளர்களிடையே 39.03% பெரும்பான்மையாக சிங்கள மொழி விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்களாகும். அவ்வாறே, சிங்கள மொழியில் விவாகம் பதிவு செய்யும் பதிவாளர்களின் எண்ணிக்கை மொத்த பதிவாளர்களின் எண்ணிக்கையில் 21.7 % ஆக அறிக்கையிடப்பட்டதுடன் தமிழ் மொழியில் பிறப்பு மற்றும் இறப்பினை பதிவு செய்யும் வைத்திய பதிவாளர்கள் மொத்த பதிவாளர்களில் 1.95 % ஆகிய சிறியளவாகும்.



பதிவு செய்யப்பட்ட விவாகம், பிறப்பு மற்றும் இறப்புக்களின் எண்ணிக்கை

விவாகம், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்கள் வழங்கல் சம்பந்தமான விபரங்கள்

2021 ஆம் வருடத்தினுள் பிறப்பு, விவாகம், இறப்பு மற்றும் அனுமான வயதுச் சான்றிதழ்களின் பிரதிகளுக்காக பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 3,368,123 ஆனதுடன், அதனுள் 3,037,871 தேடுதல்கள் தேவையற்றதாகவும், 330,252 தேடுதல் அவசியமான விண்ணப்பங்களாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், 2021 ஆம் வருடத்தினுள் வழங்கப்பட்ட பிறப்பு, விவாகம், இறப்பு மற்றும் அனுமான வயதுச் சான்றிதழ் பிரதிகளின் எண்ணிக்கை 5,246,306 ஆனதுடன் அதில் தேடுதல் தேவையற்றதாக 4,860,608 வழங்கப்பட்டுள்ளதுடன் தேடுதல்களுடன் வழங்கப்பட்டது 385,698 ஆக அறிக்கையிடப்பட்டுள்ளது.

2021 ஆம் வருடத்தினுள் வழங்கப்பட்ட பிறப்பு, விவாகம், இறப்பு மற்றும் அனுமான வயதுச் சான்றிதழ்களின் பிரதிகளினை வழங்கும் பொழுது பெறப்பட்ட வருமானம் ரூ.627,524,377.00 ஆக கணக்கிடப்பட்டுள்ளது.

பதிவிற்காக அனுப்பப்பட்ட இரண்டாம் பிரதிகள் பிரதிக்கினைகள் விண்ணப்பங்கள் பற்றிய விபரங்களினைப் பதிவு செய்தல்

2021 ஆம் வருடத்தினுள் பதிவு செய்யப்பட்ட விவாகம், பிறப்பு மற்றும் இறப்புக்கள்

வருடம்	விவாகம்	பிறப்பு	இறப்பு
2016	173990	331073	130765
2017	169356	326052	139822
2018	170027	328112	139498
2019	164988	427246	144631
2020	111457	509302	107240
2021	**159984**	**276265**	**137367**

2021 பதிவிற்காக கிடைக்கப் பெற்ற பிரதிக்கினைகள்

பிரதிக்கினைகள் பற்றிய விபரங்கள்	பிரதிக்கினைகளின் எண்ணிக்கை	பெறப்பட்ட வருமானம்
24 வது பிரிவு	11777	563211
27 பிரிவு	19826	531573
27 (அ) பிரிவு	9809	364817
52 வது பிரிவு	4090	206394
36 வது பிரிவு	2249	78848
கண்டிய விவாகம், விவாகரத்துச் சட்டத்தின் 51 வது பிரிவிற்கு உரிய விண்ணப்பங்கள்	201	
முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் 77 வது பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்	44450	

வழங்கப்பட்ட அனுமான வயதுச் சான்றிதழ்களின் அளவு

வருடம்	அனுமான வயதுச் சான்றிதழ்
2016	6067
2017	3232
2018	5485
2019	2883
2020	2424
2021	**1669**

2016-2021 ஆம் ஆண்டு காலப்பகுதியினுள் வழங்கப்பட்ட அனுமான வயதுச் சான்றிதழ்களின் எண்ணிக்கை ஏற்றத்தாழ்வுட
பொழுது 20210 ஆம் வருடத்தினுள் வழங்கப்பட்ட மொத்த அனுமான வயதுச் சான்றிதழ்களில் 31% பின்னடைவினைக் காட்டுகின்றது.

விவாம், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்கள் மொழிப்பெயர்ப்புக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை

2021 ஆம் வருடத்தில் விவாகம், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களின் மொழிப்பெயர்ப்பிற்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 55,946 ஆனதுடன் அது முன்னைய வருடத்தில் கிடைக்கப்பெற்ற 25,822 விண்ணப்ப எண்ணிக்கையுடன் ஒப்பிடும் பொழுது 53.84% கருத்திற் கொள்ளத்தக்க அதிகரிப்பினைக் காட்டுக்கின்றது.

வழங்கப்பட்ட விவாகம், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களின் மொழிப்பெயர்ப்பு

2020 ஆம் ஆண்டில் பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் விவாகம், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ் மொழிப்பெயர்ப்பு பிரதிகள் 37,980 வழங்கப்பட்டதுடன், 2021 ஆம் வருடத்தில் விவாகம், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களின் மொழிப்பெயர்ப்பு பிரதிகள் 11,633 வழங்கப்பட்டுள்ளது.

2021 ஆம் வருடத்தினுள் விவாகம், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களின் மொழிப்பெயர்ப்பு பிரதிகளினை வழங்குவதன் மூலம் பதிவாளர் நாயகத்தினால் உழைக்கப்பட்ட மொத்த வருமானம் ரூ. 6,336,755.90ஆகும்.

❖ காணி மற்றும் ஆவணங்கள் பதிவு செய்தல்

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் நொத்தாரிசு பிரிவின் மூலம் காணிப்பதிவகங்களின் கண்காணிப்பு, நொத்தாரிசு நியமனம் மற்றும் நிருவாகம், சிதைவடைந்த காணிப்புத்தக ஏடுகளினை மீளத் தயாரித்தல், அசையும் ஆதனங்களின் பதிவு ஆகிய கடமைகள் நிறைவேற்றப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக ஆவணங்கள் பதவு செய்வதற்குரிய சட்டங்களினைத் திருத்துதல், சுற்றுநிருபங்கள் மற்றும் ஆலோசனை கடிதங்கள் வழங்கல் நிகழ்த்தப்படுகின்றது.

நொத்தாரிசு பிரிவின் கடமைப் பொறுப்புக்கள்

1. நொத்தாரிசு நியமனம்
2. நொத்தாரிசுகளின் தனிநபர் கோவையினைப் பேணுதல்
3. அற்றோனி தத்துவத்தினை பதிவு செய்தல், அவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியினை வழங்கல் மற்றும் சுருக்கப் பிரதிகளினை வழங்கல்.
4. சிதைவடைந்த காணிப்புத்தக ஏடுகளினை மீளத் தயாரித்தல்
5. அசையும் ஆதனங்களினை பதிவு செய்தல்
6. வருடாந்த நொத்தாரிசு பெயர்ப்பட்டியலினை தயாரித்தல்.
7. ஆவணப் பதிவிற்கு உரிய சட்டங்களின் திருத்தம்
8. ஆவணப் பதிவிற்கு உரிய சுற்றுநிருபங்களினைத் தயாரித்தல்
9. உறுதிகளினை இரத்துச் செய்வதற்காக நீதிமன்றத்தினால் கிடைக்கப்பெறும் வழக்குத் தீர்ப்பிற்காக திணைக்கள கட்டளையினைப் பெற்றுக் கொடுத்தல்.
10. காணிப் பதிவகங்களின் மாதாந்த முன்னேற்ற அறிக்கை மீளாய்வு

11. ஆவணப் பதிவுகள் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்படும் பொது மக்கள் சிக்கல்களுக்கான பதிலினைப் பெற்றுக் கொடுத்தல்

நொத்தாரிசுகள் பற்றிய விபரங்கள்

2021 ஆம் ஆண்டினுள் நொத்தாரிசுக் கடமையில் ஈடுபட்ட சட்டத்தரணிகள் மற்றும் சட்டத்தரணிகள் அல்லாத நொத்தாரிசுகளின் எண்ணிக்கை மற்றும் அவர்கள் பற்றிய விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

தொடர் இலக்கம்	விபரம்	சட்டத்தரணி நொத்தாரிசு	சட்டத்தரணிகள் அல்லாத நொத்தாரிசு	மொத்த எண்ணிக்கை
1	2021 ஜனவரி 01 ந் திகதியில் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களின் எண்ணிக்கை	12,645	583	13,228
2	வருடத்தினுள் புதிதாக தொழிலினை ஆரம்பித்தவர்களின் எண்ணிக்கை	595	25	620
3	வருடத்தினுள் கேட்டு விலகியவர்களின் எண்ணிக்கை	124	1	125
4	வருடத்தினுள் கடமை நிறுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை	36	03	39
5	வருடத்தினுள் இறப்பெய்தியவர்களின் எண்ணிக்கை	44	03	47
6	2021 டிசம்பர் 31 ந் திகதியில் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களின் எண்ணிக்கை	13036	752	13788

2021 ஆம் ஆண்டு இறுதியில் சட்டத்தரணி நொத்தாரிசுகள் 13036 பேர்களும் சட்டத்தரணிகள் அல்லாத நொத்தாரிசுகள் 752 பேர்களும் கடமையில் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன் 2021.12.31 ந் திகதி இந்த திணைக்களத்தின் கீழ் கடமையாற்றும் மொத்த நொத்தாரிசுகளின் எண்ணிக்கை 13788பேர்கள் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.


2021 ஆம் ஆண்டினுள் வழங்கப்பட்ட நொத்தாரிசு அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை

- புதிதாக வழங்கப்பட்ட நொத்தாரிசு அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை- ***638***
- மேலதிக மொழியில் கடமையாற்றுவதற்காக - ***402***
- நீதிமன்ற வலயத்தினை மாற்றுவதற்காக - ***104***

நொத்தாரிசு அனுமதிப்பத்திரம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் நொத்தாரிசு பிரிவினால் வழங்கப்படும். 2020 ஆம் வருடத்தில் நொத்தாரிசு அனுமதிப்பத்திரம் 892 வழங்கப்பட்டதுடன் 2021 ஆம் வருடத்தினுள் வழங்கப்பட்ட மொத்த நொத்தாரிசு அனுமதிப்பத்திரத்தின் எண்ணிக்கை 1,144 வரை உயர்வடைந்துள்ளது.

மேலும் 2021 ஆம் வருடத்தினுள் புதிதாக வழங்கப்பட்ட நொத்தாரிசு அனுமதிப்பத்திரங்களினால் பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் ரூ. 530,000.00 ஆனதுடன் ரூ. 718,000.00 வருமானம் மேலதிக மொழியில் கடமையாற்றுவதற்காக நொத்தாரிசு அனுமதிப்பத்திரம் வழங்கப்படல் மூலமும் ரூ. 259,000.00 வருமானும் நீதிமன்ற வலயத்தினை மாற்றுவதற்கான அனுமதிப்பதிரம் வழங்கப்படலினாலும் அறிக்கையிடப்பட்டது. அதற்கிணங்க நொத்தாசு அனுமதிப்பத்திரம் வழங்குவதன் ஊடாக திணைக்களத்திற்கு கிடைத்த மொத்த வருமானம் ரூ. 15,070,00.00 ஆக காட்டப்பட இயலும்.

சிதைவடைந்த காணிப் புத்தக ஏட்டினை மீள தயாரித்தல்



. 2021 **ஆம் ஆண்டில் சிதைவடைந்த காணி ஆவணங்களினை மீள தயாரிப்பதற்காக பெறப்பட்ட வேண்டுக் கோள்களின் எண்ணிக்கைகள்** ***90*** ஆனதுடன் காணிப் புத்தகங்களினை மீள தயாரித்தலுக்கா அனுமதிக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை 31 ஆகும்.

ஆவணம் பதிவு செய்தல்

- 2021 வருடத்தினுள் பதிவிற்காக கிடைக்கப்பெற்ற உறுதிகளின் எண்ணிக்கை – 964,737
  - ஒரு நாள் சேவையின் கீழ் - 153,006
  - சாதாரண சேவையின் கீழ் - 811,731
- 2021 வருடத்தினுள் பதிவிற்காக கிடைக்கப்பெற்ற அற்றோணி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை ***7,897***

ஆவணங்கள் பாதுகாப்பு

2021 ஆம் ஆண்டினுள் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டாம் பிரதிகளின் எண்ணிக்கை 746,146 ஆக கணக்கிடப்பட்டுள்ளது.


சான்றிதழ்களினைப் பெற்றுக் கொள்வதற்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள்

- காணிப்புத்தக சுருக்கப் பிரதிகள் 1,127,994

  ஒரு நாள் சேவை 869,736
  சாதாரண சேவை 258,258

- உறுதி பிரதிகள் 159,718

  ஒரு நாள் சேவை 75,698
  சாதாரண சேவை 84,020



2020 ஆம் ஆண்டில் காணிப் புத்தகங்களின் சுருக்கப்பிரதிகளுக்காக விண்ணப்பங்கள் 1,543,608 கிடைக்கப்பெற்றதுடன் 2021 ஆம் வருடத்தினுள் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 1,127,994 வரையான உயர்வினைக் காட்டியதுடன் அது 27% சதவிகிதத்திலான உயர்வடைவாகும்.



2020 ஆம் வருடத்தினுள் உறுதி பிரதிகளுக்காக விண்ணப்பங்கள் 262,220 கிடைக்கப்பெற்றதுடன் 2021 ஆம்

வருடத்தினுள் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 159,718 வரையிலான வீழ்ச்சியினை அடைந்துள்ளது.

ஆவணங்களினை தேடுவதற்கு கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை

- காணிப் புத்தகங்கள் 52,384
- உறுதிகள் மற்றும் வேறு ஆவணங்கள் 3,814

திணைக்களத்தினால் அறவிடப்படும் கட்டணங்கள்

பதிவு செய்தல் வருமானம் (ரூ.)

- முத்திரைக் கட்டணம் (உறுதிகள் மற்றும் வேறு ஆவணங்கள் மற்றும் உரித்து சாதனங்கள்)

  மாகாண சபைக்கு 59,562,886,434.21

  மத்திய அரசாங்கத்திற்கு 7,725,678,778.54

- ஆவணங்கள்/ உறுதிகள் பதிவு செய்தல் கட்டணம் (ரூ.)

  விரைவு 60,571,460.00

  சாதாரண சேவை 92,114,470.00

- கேவியட் தடை

  பதிவு செய்தல் கட்டணம - 42,220,210.00

  இரத்துச் செய்தல் கட்டணம் - 108.400.00

பரிசீலனை செய்யப்படும் சுருக்கப்பிரதிகள் வழங்கல் கட்டணம்

- காணி ஆவணம் பரிசீலனைக் கட்டணம் 33,796,510.00

- காணிப் புத்தகங்களின் சுருக்க உறுதிப்படுத்தப்பட்ட/ வேறு வழங்கற் கட்டணம்

  விரைவு சேவை 357.814,800.00

  சாதாரண சேவை 73,230,160.00

- உறுதிகளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் வழங்கல் கட்டணம்

  விரைவு சேவை 87,002,980.00

  சாதாரண சேவை 55,614,740.00

அற்றோணி தத்துவம்

- பதிவு செய்தல் கட்டணம்
  - விரைவு சேவை 20,747,650.00
  - சாதாரண சேவை 49,594,370.00
- இரத்துச் செய்தல் கட்டணம் 475,329.00
- பரிசீலனைக் கட்டணம் - 94,300.00
- உறுதிப்படுத்தல் பிரதிகள் வழங்கல் கட்டணம்
  - விரைவு சேவை 480,300.00
  - சாதாரண சேவை 331,200.00
- சுருக்கப் பிரதிகள் வழங்கல் கட்டணம்
  - விரைவு சேவை 574,200.00
  - சாதாரண சேவை 296,250.00

- குறைவு - 437.50
- தண்டம் - 343,073.82
- இணக்கத் தொகை 1,320,791.56

சிவில் பதிவு செய்தல்

- விவாகம், பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் வழங்கல் - 12,176,610.00
- அனுமான வயதுச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் வழங்கல் - 122,750.00
- சான்றிதழ் மொழிப்பெயர்ப்புக் கட்டணம் - 22,130,440.00
- விவாகம் பதிவு செய்தல் கட்டணம் - 1.354,430.00
- பிரதிக்கினையின் பேரில் அறவிடப்பட்ட கட்டணம் - 49,290.00

உரித்து

- பதிவு செய்தல் கட்டணம் (விரைவு) - 3,614,825.00
- சுருக்கப் பிரதிகள் வழங்கல் கட்டணம் (விரைவு) - 4.130,550.00
- சாதனப் பத்திர பிரதிகள் வழங்கல் கட்டணம்(விரைவு) - 115,700.00
- வேறு வருமானம் - 530,374.00

❖ (E-BMD) திட்டம்

பிறப்பு, விவாகம் மற்றும் இறப்புச் சான்றிதழ்கள் கணனிமயப்படுத்தப்பட்டு கணனி மூலம் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் வழங்கல் இதன் கீழ் மேற்கொள்ளப்படும்.

2021 வருடத்தில் இற்றைவரை பேணப்பட்ட பழைய தரவு முறைமை (2008 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட) நிலவும் காலத்திற்கு மற்றும் நவீனமயப்படுத்தலுக்கு ஒவ்வாமை காரணமாக நிலவும் கோரிக்கை

உயர்வடைவுடன் தேவையான சேவையினை வழங்குவதற்கு இயலாது போனமையினால் e- bmd திட்டம் Revamp செய்யப்பட்டது/

அதற்கிணங்க, நிலவிய மென்பொருள் மற்றும் தரவு முறைமை web based மென்பொருள் மற்றும் தரவு முறைமை அனைத்து பிரதேச செயலகங்களுக்கு பிறப்பு, விவாகம் மற்றும் இறப்புச் சான்றிதழ்களினை வழங்கும் வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

நவீன தொழிநுட்பத்திற்கு இணங்க மீள தயாரிக்கப்பட்ட புதிய தரவு முறைமை தற்பொழுது ICTA cloude இனுள் நிறுவப்பட்டுள்ளது.

எதிர்ப்பார்க்கப்படும் நோக்கம்

- பொது மக்களுக்கு விரைவாக மற்றும் இலகுவாக பிறப்பு, இறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ் பிரதிகளினை பெற்றுக் கொடுக்கும் முறைமையினை ஏற்படுத்தல்.
- பிறப்பு, இறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ்களின் பாதுகாப்பிற்காக தரவு முறைமையினை ஏற்படுத்தல்.

பின்புலம்

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகங்களினைப் பதிவு செய்வதற்காக தீவின் பதிவு செய்தல் பிரிவுகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன் அந்த ஒவ்வொரு பிரிவுகளுக்கும் பதிவாளர் ஒருவர் என்ற விகிதம் நியமிக்கப்பட்டுள்ளது. பிரதிகள் மூன்றில் நிகழ்வுகள் பதிவு செய்யப்படுவதுடன் அதன் மூலப் பிரதி பிரதேச அலுவலகத்தினாலும் இரண்டாவது பிரதி மத்திய பதிவேட்டறையினாலும் பாதுகாக்கப்படும். மூன்றாவது பிரதி பிறப்பின் போது அல்லது இறப்பின் போதாயின் நிகழ்வினை அறிவித்தவருக்கும் விவாகமாயின் திறத்தவருக்கும் இலவசமாக வழங்கப்படும். பொது மக்களின் தேவையின் பேரில் பின்னர் பிரதிகள் வழங்கப்படும். உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளினை பெற்றுக் கொள்வதற்காக சான்றிதழின் இலக்கம் மற்றும் பதிவு செய்த திகதி தெரியாவிடின் உரிய சான்றிதழினை தேடிப்பார்த்து பிரதிகள் வழங்கப்பட வேண்டியதுடன் அதற்காக நிகழ்வு நிகழப்பட்டு மூன்று மாதங்களுக்கு உரிய ஆவணங்கள் பரிசீலனை செய்துப் பார்க்க வேண்டும் என்பதுடன் இதற்காக அலுவலர்களுக்கு ஏடுகளினை திருப்பிப் பார்ப்பதற்கு காலம் செல்லும். இந்த தேடுதல் காலத்தினைக் குறைப்பதற்காக ஆவணங்களின் பாதுகாப்பிற்காக பிறப்பு, இறப்பு மற்றும் விவாகத்தினை கணனி மயப்படுத்தி தரவு முறைமையினை நிறுவுதலின் தேவை அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அந்த தேவையினை பூர்த்தி செய்வதற்காக e – BMD வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது மத்திய பதிவேட்டறை, சுஹுருபாய, பண்ணிப்பிட்டிய புதிய மத்திய பதிவேட்டறை போன்ற இடங்களில் வசதிகள் வழங்கப்பட்டுள்ளது. Online EMBD வேலைத்திட்டத்தின் கீழ் பொது மக்களுக்கு Online முறைமையில் பிறப்பு, விவாகம் மற்றும் இறப்புச் சான்றிதழ்களினை கோரும் வசதிகள் மற்றும் Online Land வேலைத்திட்டத்தின் கீழ் Online முறைமையில் உறுதிகள், காணிப்புத்தக ஏடுகளுக்கு விண்ணப்பிக்கும் வசதியும் தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இ - சனத்தொகை பதிவேடு வேலைத்திட்டம் (E – Populations Registry Project

1951 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பிறப்பு மற்றும் விவாகம் பதிவு செய்தல் சட்டத்தின் ஏற்பாடானது பிறப்பு அல்லது இறப்பினை புதிதாக பதிவு செய்வதற்காக ஆகும். எனினும் பிறப்பு அல்லது இறப்பினை புதிதாக பதிவு செய்யும் பொழுது கையெழுத்துப் பிழைகள், எழுத்துப் பிழைகள் பல பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களில் காணப்படுகின்றது. அவ்வாறே விசேடமாக பிறப்புச் சான்றிதழில் திருத்தங்கள் நிகழ்த்தப்பட்டதன் பின்னர் அந்த திருத்தப்பட்ட சான்றிதழ்களில் காட்சிப்படுத்தப்படுவதனால் சான்றிதழ் உரித்தாளருக்கு அது அதிக பீடனைக்கு உட்படும் விடயமாகும்.

இ-சனத்தொகை பதிவேட்டு வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தப்படும் விதம

பிறப்பினை பதிவு செய்யும் பொழுது பெற்றோர்களிடமிருந்து பொறுப்பேற்கும் பிரதிக்கினையில் உள்ள தகவல்கள் பிரதேச செயலகத்தின் மாவட்டப் பதிவாளர் பிரிவின் அலுவலரினால் இ-சனத்தொகை பதி வேடு முறைமையில் உட்புகுத்தப்படும். அவ்வாறு உட்புகுத்தப்பட்ட தகவல்கள் அடங்கிய தரவு பத்திரம் பெற்றோர்களுக்கு அனுப்பப்பட்டு உறுதிப்படுத்தல் இடம்பெறும். அதன் பின்னர் தரவு முறைமையின் ஊடாக தனிநபர் அடையாள இலக்கம்/ எனது இலக்கம் ஆட்பதிவு திணைக்களத்தின் ஊடாக இடம்பெறும்.

இந்த தரவு முறைமையின் ஊடாக வழங்கப்படும் உரிய தேசிய பிறப்புச் சான்றிதழில் அடங்கும் விசேட இலட்சணங்கள் கீழே குறிப்பிடப்பட்டவாறாகும்.

- ஒவ்வொரு பிறப்பிற்காகவும் “எனது இலக்கம்” என்றவாறு ஒற்றை அடையாள எண் வழங்கப்படுவதுடன் அது ஆட்பதிவு திணைக்களத்துடன் சம்பந்தப்படுத்தப்பட்டு உருவாக்கப்படுவதனால் தொடர்ந்து வரும் காலங்களில் அந்த இலக்கம் தேசிய அடையாள அட்டை எண் ஆக பயன்படுத்துவதற்கு இயலுமை உள்ளது.
- இந்தச் சான்றிதழ் பதிவாளர் நாயகத்தின் கையொப்பத்துடன் வழங்கப்படுவதனால் பிறப்புச் சான்றிதழ் என பெயர்க்குறிப்பிடல்.
- இந்த பிறப்புச் சான்றிதழ் சிங்களம்/ ஆங்கிலம் அல்லது தமிழ்/ஆங்கிலம் மொழிகளில் வழங்கப்படுவதனால் சர்வதேச ரீதியில் பயன்படுத்த இயலுமாதல்.
- சான்றிதழில் இரகசிய குறியீடு (QR Code) உள்ளடக்கப்படுவதனால் போலியான தகவல்களினை உட்புகுத்தல்/ உருத்திரிபுப்படுத்தல் தடுக்கப்படும்.
- விசேட பாதுகாப்பான உதிரிகளுனான கடதாசியில் அச்சிடப்படுவதனால் அதிக ஏற்றுக் கொள்ளல் கிடைக்கும்.

அதற்கிணங்க உத்தியோக பூர்வமாக உறுதிப்படுத்தப்பட்ட மற்றும் மேம்படுத்தப்பட் பிரஜைகள் முறைமையினை பேணுவதன் ஊடாக இலங்கையருக்கு உரிய சனத்தொகை ஆவணம் உருவாக்கப்படுவதுடன் அந்த தகவல்கள் அரச நிறுவனங்களுக்கு இடையில் பரிமாற்றிக் கொள்வதற்கான இயலுமை கிடைப்பதனால் அதன் மூலம் அரச பிரிவுகளின் வினைத்திறன் முன்னேற்றப்படும்.

❖ உரித்துப் பதிவு செய்தல்

1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவு செய்தல் சட்டத்திற்கிணங்க ஆவணங்கள் பதிவு செய்தல் முறைமைக்காக உரித்துப் பதிவு செய்தல் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த வேலைத்திட்டம் இலங்கையினுள் “பிம் சவிய நிகழ்ச்சித்திட்டம்” என்னும் பெயரில் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் அரச நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்நாட்டின் முன்னுரிமையுடைய அபிவிருத்தி வேலைத்திட்டமாக பிம் சவிய வேலைத்திட்டம் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இதற்காக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு மற்றும் அரச நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுடன் தொடர்ப்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள காணி நிர்ணய திணைக்களம், காணி ஆணையாளர் திணைக்களம் மற்றும் அளவீட்டுத் திணைக்களத்தின் ஒத்துழைப்பு மற்றும் அரச நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் உள்ள பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதற்கிணயங்க இந்த வேலைத்திட்டம் 02 அமைச்சுக்களின் கீழ் 04 திணைக்களங்களின் பிரதான ஒருங்கிணைப்புடன் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. தற்பொழுது இந்த வேலைத்திட்டம் உரித்து பதிவு செய்தல் அலுவலகங்கள் 28 இல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.


2021 ஆம் வருடத்தில் உரித்து பதிவு செய்தல் நடைமுறைப்படுத்தப்படும் அலுவலகங்கள் மற்றும் ஒவ்வொரு அலுவலகங்களுக்கும் பதிவிற்காக கிடைத்த காணித்துண்டுகளின் அளவு கீழே காட்டப்பட்டுள்ளன.

	2019 வருடத்தில் பதிவு செய்யப்பட்ட காணித்துண்டுகளின் அளவு	2020 வருடத்தில் பதிவு செய்யப்பட்ட காணித்துண்டுகளின் அளவு	2021 வருடத்தில் பதிவு செய்யப்பட்ட காணித்துண்டுகளின் அளவு
அநுராதபுரம்	2275	3099	5617
கம்பஹா	6120	2758	1821
கம்பளை	490	250	1688
நீர்க்கொழும்பு	1506	851	440
இரத்தினபுரி	4182	1736	860
ஹோமாகம	1852	1836	1773
ஹம்பாந்தோட்டை	1486	2459	1555
கண்டி	4558	1902	3338
தெல்கந்தை	2272	1409	360
குருநாகலை	3985	3260	3143
மொணராகலை	1120	424	1009
